# கண்ணோட்டம்

## கண்ணோட்டம்

இந்த அறிக்கை நான்கு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதல் அத்தியாயம், ஊராட்சி அமைப்புகள் (PRIகள்) மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் (ULBக்கள்) செயல்பாடுகள், பொறுப்பு முறைமை மற்றும் நிதி சார்ந்த அம்சங்கள் மீதான ஒரு கண்ணோட்டத்தை உள்ளடக்கியது. இரண்டாவது அத்தியாயத்தில் (i) முதலமைச்சரின் சூரிய சக்தியால் இயங்கும் பசுமை வீடு திட்டம், (ii) ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி மற்றும் (iii) ஊரக பகுதிகளான புறநகர் மற்றும் பெரிய கிராம ஊராட்சிகளில் நிறுவப்பட்ட நுண் உரம் தயாரிக்கும் மையங்களின் செயல்பாடுகள் ஆகிய மூன்று பொருள் குறித்த இணைக்கத் தணிக்கைகள் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது அத்தியாயம் PRIகளின் நிதி பரிவர்த்தனைகளின் தணிக்கையின் அடிப்படையில் ஏழு இணைக்கத் தணிக்கைப் பத்திகளைக் கொண்டுள்ளது. நான்காவது அத்தியாயம் ULBகளின் நிதி பரிவர்த்தனைகளின் மீதான தணிக்கையின் அடிப்படையில் ஆறு இணைக்கத் தணிக்கைப் பத்திகளைக் கொண்டுள்ளது. இந்த அறிக்கையில் உள்ள சில கண்டுபிடிப்புகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

### I ஊராட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், பொறுப்பு முறைமை மற்றும் நிதி சார்ந்த அம்சங்கள் மீதான ஒரு கண்ணோட்டம்

இந்திய அரசியலமைப்பு 73வது சட்டத்திருத்தம், பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 29 செயல்பாடுகளை PRIகளுக்குப் பகிர்ந்தளிக்க மாநிலத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது. இந்த 29 செயல்பாடுகளின் கீழ், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் பணிகளை மேற்பார்வையிடவும், உதவவும், கண்காணிக்கவும் மாநில அரசு PRIன் மூன்று அடுக்குகளுக்கு சில அதிகாரங்களை வழங்கியுள்ளது. இதே போன்று, இந்திய அரசியலமைப்பின் 74வது சட்டத்திருத்தம், பன்னிரண்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 18 செயல்பாடுகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்க மாநிலத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. தீயணைப்பு சேவை தவிர அனைத்து செயல்பாடுகளும் மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி - GCC தவிர) மற்றும் நகராட்சிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளைப் பொறுத்தவரை, 10 பணிகள் முழுமையாகவும், இரண்டு பணிகள் பகுதியாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆறு பணிகள் இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. GCC பொறுத்தவரை, 18 செயல்பாடுகளில் 13 பகிர்ந்தளிக்கப்பட்டன. இருப்பினும், பகிர்ந்தளிக்கப்பட்ட 13 செயல்பாடுகளில் ஒன்றான, சென்னை பெருநகரப் பகுதியின் வீடுகள், தொழிற்சாலை, வணிகம் ஆகியவற்றிற்கு நீர் வழங்கல் பணி, மாநில சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு அமைப்பான சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் கையாளப்படுகிறது.

உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரின், வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சிகள் தொடர்பான, 74,722 மற்றும் 863 நிலுவையில் உள்ள பத்திகளில் முறையே, 43,664 (58 விழுக்காடு) மற்றும் 448 (52 விழுக்காடு) பத்திகள், 2019-20 வரையிலான காலகட்டகத்தைச் சார்ந்தது. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் தொடர்பாக உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரால் வழங்கப்பட்டு, 2021-22 வரை நிலுவையிலிருந்த பத்திகள் முறையே 47,000, 52,194 மற்றும் 75,271 ஆக இருந்தது. இவற்றில் 28,488 (61 விழுக்காடு) - மாநகராட்சிகள், 25,044 (48 விழுக்காடு) - நகராட்சிகள் மற்றும் 28,530 (38 விழுக்காடு) - பேரூராட்சிகள், 2017-18 வரையிலான காலகட்டத்துடன் தொடர்புடையவை.

**(பத்திகள் 1.3 மற்றும் 1.5; பக்கங்கள் 2 மற்றும் 4)**

## II பொருள் குறித்த இணக்கத் தணிக்கைகள் (ஊராட்சி அமைப்புகள்)

### முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் மீதான பொருள் குறித்த இணக்கத் தணிக்கை

தமிழ்நாடு அரசு, ஊரகங்களில் வாழும் அனைத்து ஏழை மக்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும் சூரிய மின் சக்தியால் ஒளியூட்டப்படும் வசதிகளுடன் கூடிய (Solar Photovoltaic Home Lighting System - SPVHLS) நிலையான வீடுகளை வழங்கும் நோக்கத்துடன், 'முதலமைச்சரின் சூரிய எரிசக்தியுடன் இயங்கும் பசுமை வீடு திட்டத்தை' (Chief Minister's Solar Powered Green House Scheme) தொடங்கியது (2011). இத்திட்டம், ஊரகப் பகுதிகளில் வாழும் நலிவுற்றோர்க்கு வீட்டு வசதி அளிப்பதில் எந்தவொரு குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஒரு அலகிற்கான விலை மதிப்பு திருத்தியமைக்கப்படாததால், வீடுகள் கட்டும் செலவினத்தை சந்திக்க இயலாமல் அநேக தகுதியுள்ள நலிவுற்ற பயனாளிகளுக்கு திட்ட பலன்கள் சென்றடையவில்லை. வீடுகள் கட்டுவதற்கான வருடாந்திர இலக்கு, 'திட்டத்தின் கீழ் நலிவுற்றவர்கள்' (Participatory Identification of Poor) என்ற பட்டியலில் இருந்த இலக்குக்குரிய பயனாளிகளுடன் இணைக்கப்படாமல் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பயனாளிகளை தேர்வு செய்யும் முறையில் குறைபாடுகள் இருந்ததோடு மட்டுமல்லாமல் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளும் கள அலுவலர்களால் கடைபிடிக்கப்படவில்லை. மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகளின் திட்ட இயக்குநரால், பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் சிமெண்ட் மற்றும் எஃகு (steel) கம்பிகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படாததால் வீடுகள் கட்டி முடிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதோடு, நலிவுற்ற பயனாளிகளைச் சுமைக்குள்ளாக்கியது. மாதிரி ஒப்பந்த ஆவணம் தாமதமாக இறுதிப்படுத்தப்பட்டதால், பசுமை வீடுகளில் சூரிய சக்தியில் இயங்கும் ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகளை நிறுவுவதில் தாமதம் ஏற்பட்டது. ஒப்பந்த வழிமுறைகளில் இருந்த பலவகையான மீறல்களால் ஒப்பந்தங்கள் வழங்கலில் முறைகேடு ஏற்பட்டதோடு, பசுமை வீடுகளுக்கு வழங்கப்பட்ட சூரிய ஒளி மின்னழுத்த முகப்பு விளக்கு அமைப்புகளின் தரத்தையும் இது பாதித்தது.

**(பத்தி 2.1; பக்கம் 15)**

### ஒருங்கிணைந்த ஒதுக்கப்பட்ட வருவாயின் திட்டக் கூறு நிதி மீதான பொருள் குறித்த இணைக்கத் தணிக்கை

மாநில அரசு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் 'ஒதுக்கப்பட்ட வருவாயை' மாநில அளவில் திரட்டி, அதனை விரைவாகவும் சமமாகவும் பகிர்ந்தளிக்கும் பொருட்டு, மாநில நிதி குழுவின் விதிமுறைகளின்படி அதன் 1/3 பங்கினை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மீதமுள்ள 2/3 பங்கினை ஊரகப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான நிதிக்கும் பகிர்ந்தளிக்க முடிவு செய்தது (2007). ஒருங்கிணைந்த ஒதுக்கப்பட்ட வருவாயின் திட்டக் கூறுகளை உள்ளடக்கிய இந்த நிதி (SCPAR), கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தால் (DRD&PR) பராமரிக்கப்படுகிறது. சாலைப் பணிகள், ஊரகப் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டிடங்கள், குடிநீர் விநியோகப் பணிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக கிராம அளவில் திட்டங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுகிறது. இருப்பினும், இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமைப் பணிகளைக் கண்டறிந்து முன்மொழிவதற்கான வழிமுறைகள் இல்லை. இதேபோல், பதிவுத் துறையால் ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வின் மீதான மிகைக் கட்டணத்தின் வருவாயை சரிபார்க்க DRD&PRக்கு எந்த வழிவகையும் இல்லை. DRD&PRல் பராமரிக்கப்படும் திட்டம் தொடர்பான ரொக்கப் புத்தகம் ஒவ்வொரு மாதமும் வங்கிக் கணக்குடன் ஒத்திசைவு செய்யப்படவில்லை. பணியை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டதற்காக ஒப்பந்ததாரரிடம் அபராதம் விதிக்கவோ அல்லது ஒப்பந்தத்தை ரத்து செய்யவோ துறை நடவடிக்கை எடுக்கவில்லை. இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சாலைப் பணிகள் IRC வழிகாட்டுதல்கள் மற்றும் அரசு அறிவுறுத்தல்களின்படி செயல்படுத்தப்படவில்லை. திட்டத்தின் பணிகளுக்கான தரம் கண்காணிக்கப்படவில்லை.

**(பத்தி 2.2; பக்கம் 46)**

### ஊரக பகுதிகளான புறநகர் மற்றும் பெரிய கிராம ஊராட்சிகளில் நிறுவப்பட்ட நுண் உரம் தயாரிக்கும் மையங்களின் செயல்பாடுகள் மீதான பொருள் குறித்த இணைக்கத் தணிக்கை

மாநில அரசு, திடக்கழிவுகளை திறம்பட மேலாண்மை செய்யும் பொருட்டு, புறநகர்[1] மற்றும் பெரிய கிராம ஊராட்சிகளில் நுண் உரம் தயாரிக்கும் மையங்களை (MCCக்கள்) நிறுவிட ஒரு திட்டத்தை உருவாக்கியது (ஜனவரி 2020). இப்பகுதியில் உற்பத்தியாகும் அதிக அளவிலான கழிவுகளை அவ்விடங்களில் திறம்பட கையாள இயலாததாலும் மற்றும் நிலப்பரப்புகளில் குவிக்கப்பட்ட இக்கழிவுகள் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதோடு சுகாதாரக் கேட்டினை உண்டாக்குவதாலும் மேற்கண்ட திட்டத்தை மாநில அரசு முன்மொழிந்தது. MCCகளை நிறுவுவதற்கு மாவட்ட அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளில் சான்றளிக்கப்பட்ட மக்கும் கழிவுகளின் ஒரு நாள் சராசரி அளவானது தகுதி நெறிமுறைகளை பூர்த்தி செய்வதற்காக மிகைப்படுத்தப்பட்டிருந்தது. MCC

[1] மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சிகளுக்கு அருகில்.

பணிகளுக்கான தளத்தை நீர்நிலைகளுக்கு அப்பால் தெரிவு செய்ய மாவட்ட அதிகாரிகள் தவறிவிட்டனர். MCCகளை நிறுவுதல்/செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் சில கிராம ஊராட்சிகளில் இடத்தைத் தெரிவுசெய்வதில் வெளிப்படைத்தன்மையின்மை ஆகியவை, பொதுமக்களிடையே எதிர்ப்பை ஏற்படுத்தியதோடு MCCகள் நிறுவப்படுதலில் காலதாமதத்தையும் ஏற்படுத்தியது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் சோதனைத் தணிக்கை செய்யப்பட்ட சில MCCகளில் அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகள் குறைவுபட்டு இருந்தன. மேலும், MCCகளின் திறன் பயன்பாடு குறைவாக இருப்பதாகக் கண்டறியப்பட்டது. சோதனைத் தணிக்கை செய்யப்பட்ட மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில் செயல்படுத்தும் அதிகாரிகளின் கண்காணிப்பில் குறைவும், பயிற்சி அளிப்பு மற்றும் சமூக தணிக்கை நடத்துவதில் குறைபாடுகளும் கவனிக்கப்பட்டன

**(பத்தி 2.3; பக்கம் 68)**

## III இணைக்கத் தணிக்கை (ஊராட்சி அமைப்புகள்)

குளக்கரையில்/குளக்கரை சரிவில் இடப்பட்ட மண் சரிவுப்பகுதியினை சீர்செய்தலுக்கு (compaction of earth fill) பவர் ரோலர்களைப் பயன்படுத்தாததால், ₹2.25 கோடி அதிகமாக வழங்கப்பட நேரிட்டது. ஒப்பந்ததாரர்களால் வட்டார வளர்ச்சி அலுவலர்/வட்டார ஊராட்சிக்கு வழங்கப்பட்ட பட்டியல்களின் உண்மைத் தன்மையை சரிபார்க்காததால், ஒப்பந்ததாரர்களுக்கு ₹45.25 இலட்சம் மோசடியாக வழங்கப்பட்டது.

**(பத்தி 3.1.1; பக்கம் 85)**

திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஒப்பந்தத்தின் நிபந்தனைப்படி செயல்பட தவறிய ஒப்பந்ததாரரின் மீது ஒப்பந்த நிபந்தனையை செயல்படுத்த தவறியதால், பணியை மீண்டும் டெண்டர் செய்ய நேர்ந்தது. இதன் காரணமாக ஏற்பட்ட செலவினம் வசூலிக்கப்படாமல், அரசுக்கு ₹1.66 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டது.

**(பத்தி 3 .1.2; பக்கம் 87)**

மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கங்களில் கிருமியொழிப்பு செய்யும் நோக்கத்திற்காக குளோரினேஷன் கருவிகளை கொள்முதல் செய்ததில், ஊராட்சி ஒன்றியங்கள் திறந்த டெண்டர் செயல்முறையை மேற்கொள்ளத் தவறியது, ₹1.54 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவினத்திற்கு வழிவகுத்தது. மேலும், கண்காணிப்பிலிருந்த குறைபாடுகளினால், நிறுவப்பட்ட குளோரினேஷன் கருவிகள் பயன்படுத்தப்படாமல் இருந்தன.

**(பத்தி 3.1.3; பக்கம் 90)**

இரண்டு மாவட்டங்களில், உடற்பயிற்சி உபகரணங்களின் வழங்கல் மற்றும் நிறுவலுக்கான ஒப்பந்தங்களை இறுதி செய்தலின் போது, ஒப்பந்த செயலாக்க அதிகாரிகளால், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998ன் விதிமுறைகளும் ஏல நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்படாததால், ₹69.18 இலட்சம் அதிகப்படியான செலவினம் ஏற்பட்டது.

**(பத்தி 3.1.4; பக்கம் 96)**

தகுந்த கட்டண வகையின் கீழ் மின் இணைப்பைப் பெறத் தவறியதால், ஆகஸ்ட் 2017 முதல் மார்ச் 2023 வரை செலுத்தப்பட்ட மின்சாரக் கட்டணத்தில் ₹1.29 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்பட்டது.

**(பத்தி 3.2.1; பக்கம் 100)**

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998ன் விதிமுறைகளை கடைபிடிக்காததால், எதிர்மறை சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு இயந்திரங்களை கொள்முதல் செய்ததில் ₹74.94 இலட்சம் தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்பட்டது.

**(பத்தி 3.2.2; பக்கம் 102)**

முறையற்ற திட்டமிடல் காரணமாக, ஈரோடு மாவட்டம், புதூர் கிராமத்தில் கட்டப்பட்ட ஊரக பேருந்து நிலையம் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக பயனற்ற நிலையில் உள்ளதால், செலவிடப்பட்ட ₹1.51 கோடி பயன்படுத்தப்படாத முதலீடாக உள்ளது.

**(பத்தி 3.3.1; பக்கம் 105)**

## IV இணக்கத் தணிக்கை (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்)

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் ₹6.33 கோடி செலவில் உருவாக்கப்பட்ட சமூகக் கழிப்பறைகள் (42), சமுதாயக் கூடங்கள் (3) மற்றும் இறைச்சிக் கூடங்கள் (slaughter houses) (5) ஆகியவை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாததால் பொதுமக்களைப் பலன்கள் சென்றடையவில்லை. இதனால், அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் இக்கட்டுமானங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்கின்ற நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

**(பத்தி 4.1.1; பக்கம் 109)**

தளியூர் பேரூராட்சியால் நீர்நிலைகளில் கட்டப்பட்ட வள மீட்பு மையம் மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவின்படி இடிக்கப்பட்டு, நீர்நிலை மறுசீரமைக்கப்பட்டதில் ₹1.05 கோடி வீண் செலவினம் ஏற்பட்டது.

**(பத்தி 4.1.2; பக்கம் 114)**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொழில் வரி செலுத்தப்பட வேண்டும் என்று சட்ட விதிமுறைகளில் இருந்தபோதும், ஊழியர்களிடம் இருந்து வசூலிக்கப்பட்ட தொழில் வரியினை அக்கழகம் செலுத்தவில்லை. மேலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் அதை வசூலிக்கத் திறம்பட நடவடிக்கை எடுக்காததால், ₹7.04 கோடி தொழில் வரி செலுத்தப்படவில்லை.

**(பத்தி 4.2.1; பக்கம் 116)**

2007-08 மற்றும் 2021-22க்கு இடையே, இரண்டு நகர மாநகராட்சிகளால், தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (Electronics Corporation of Tamil Nadu Limited) வசம் இருந்த நிலத்தின் மீது, காலி நில வரி ₹3.95 கோடி விதிக்கப்படவில்லை.

**(பத்தி 4.2.2; பக்கம் 118)**

மாநில அரசின் வழிகாட்டுதல்களின்படி, கோவை மாநகராட்சி, உயர் சிறப்பு மருத்துவமனையை சிறப்புக் கட்டிடங்களின் கீழ் மதிப்பீடு செய்ய தவறியதால், ஆறு அரையாண்டுகளில் (six half years) சொத்து வரி மீது, ₹1.61 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.2.3; பக்கம் 121)**

பேட்டரி மூலம் இயக்கப்படும் 524 வாகனங்களின் மீதான சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் அளிக்கப்பட்ட ஏழு விழுக்காடு வரி குறைப்பு, வழங்குநர்களால் ULBகளுக்கு வழங்கப்படவில்லை. இதன் விளைவாக வழங்குநர்களுக்கு ₹57.76 இலட்சம் மிகைப்பட்ட பலன் கிடைத்தது.

**(பத்தி 4.3.1(அ); பக்கம் 122)**

ஒன்பது ULBகளில் கொள்முதல் செய்யப்பட்ட 334 BOVகளுக்கு லித்தியம் அயன் பேட்டரிக்கு பதிலாக லெட் ஆசிட் பேட்டரி வழங்கப்பட்டதால், விலையில் ஏற்பட்ட வேறுபாட்டின் காரணமாக, ஒப்பந்ததாரர் ₹51.56 இலட்சம் மிகுதியாகப் பெற நேரிட்டது.

**(பத்தி 4.3.1(ஆ); பக்கம் 123)**